

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில், 6 வழித்தடங்களில் வழித்தட நீட்டிப்பு / மாற்றியமைக்கப்பட்ட மகளிர் விடியல் பயண பேருந்து சேவைகளை மாவட்டச் செயலாளர், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.



கோவை வடக்கு மாவட்டம், ஆர்.எஸ்.புரம் பகுதி, வார்டு எண் 72 க்குட்பட்ட மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாமன்ற உறுப்பினர், பகுதி கழக செயலாளர் கார்த்திக் கே.செல்வராஜ் ஏற்பாட்டில் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், தொண்டாமுத்தூர் அ.ரவி பரிசு பொருட்களை வழங்கினார். இதில் மாமன்ற முன்னாள் உறுப்பினர் அம்சவேணி செல்வராஜ், கிருபா சபரிநாதன் உள்பட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இந்த நான்கு ஆண்டுகளில்

# ரூ.571.55 கோடி மதிப்பீட்டில் 352 திருக்கோயில்களில் திருப்பணிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்!



சென்னை,அக்.17 –

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (15.10.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் மு.பன்னீர்செ ல்வம், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜி. பிரின்ஸ், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பி னர் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**மு.பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நாங்கூர் பெருமாள் கோயிலில் திருமணக்கூடம் அமைக்க அரசு ஆவனசெய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர் பாபு :** உறுப்பினர் கோரிய அருள்மிகு நாங்கூர் பெருமாள் கோயிலில் புதிய திருமண மண்டபம் கட்டுவது தொடர்பான வழக்கு மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வருகின்ற நவம்பர் 19 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது. மாண்பமை உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு கிடைக்கப்பெற்றவுடன் அந்த திருமண மண்டபத்தினை கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பன்னீர்செல்வம் :** அமைச்சர் இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். அது எப்போது முடிவடையும் என தெரியவில்லை. எனது சீர்காழி தொகுதிக்குட்பட்ட நாங்கூர் அருள்மிகு நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் சுவாமி வீதியுலா வருவதற்கு சப்பரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த சப்பரம் தற்போது பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அதற்கு பதிலாக புதிய திருத்தேர் ஒன்றினை அமைத்து தருவாரா என்றும், திருமயிலாடி அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திருக்குளம் நீண்டகாலமாக தூர் வாரப்படாமல் உள்ளதை தூர் வாரிக் கொடுத்து, அதற்கு தடுப்புச் சுவர் அமைத்து தர முன்வருவாரா என தங்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு:** உறுப்பினர் கோரிய நாங்கூர் அருள்மிகு நாராயணப் பெருமாள் திருக்கோயிலின் சப்பரம் பழுதாகி உள்ளது உண்மைதான். உடனடியாக அந்த சப்பரத்தை சீரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். திருக்தேர் வீதி உலா வருவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, இருப்பின் உறுப்பினர் கோரிய திருத்தேரும் செய்து தரப்படும். அதுபோல திருமயிலாடி அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலின் திரு க்குளமானது ஒரு ஏக்கர் 27 சென்ட் பரப்பளவில் அமைந்துந்துள்ளது. அந்த குளத்தை தூர்வாரி, தடுப்புச் சுவர் கட்டும் பணி இந்தாண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு, 6 மாத காலத்திற்குள் முடித்து தரப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பன்னீர்செல்வம் :** திருப்புங்கூர் அருள்மிகு சிவலோக நாதர் ஆலயத்தில் தற்போது திருப்பணி நடைபெற்று வருகிறது. எப்போது குடமுழுக்கு நடத்தப்படும் என அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு:** இந்த மன்றத்திற்கு சொல்ல வேண்டிய ஒரு தகவல். ஆயிரம் ஆண்டு திருக்கோயில்கள் என்பது மன்னர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட பொக்கிஷங்கள் ஆகும். அந்த திருக்கோயில்கள் புனரமைத்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து எந்த காலத்திலும் ஏற்படாத ஒரு எண்ணம் முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உதித்திட்டதன் காரணமாக ஆண்டிற்கு ரூ. 100 கோடி வீதம் இதுவரை ரூ. 425 கோடி ரூபாயினை அரசின் சார்பில் நிதியாக வழங்கினார்கள். இத்துடன் கூடுதலாக உபயதாரர் நிதி, பொதுநல நிதி மற்றும் திருகோயில் நிதி சேர்த்து ரூ. 571.55 கோடி மதிப்பீட்டில் சுமார் 352 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் 71 திருக்கோயில்களுக்கு இதுவரை குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டு ள்ளது. இதர ஆயிரம் ஆண்டு திருக்கோயில்களின் பணிகளை விரைவுபடுத்தி குடமுழுக்கை முடித்து ஒரு வரலாற்று பெருமையை படைத்து இந்த மாமன்றத்தில் தெரிவிப்போம். உறுப்பினர் கோரிய அந்த திருக்கோயிலின் திருப்பணி 80 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. வரும் ஜனவரி மாத இறுதியில் அந்த திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ.ஜி. பிரின்ஸ்:** எனது சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இரணியல் கிராமம், வேணுகோபால கிருஷ்ணன் கோயில், தலக்குளம் கிராமம் பெருமாள் கோயில் ஆகிய இரண்டு கோயில்களும் ஆயிரம் ஆண்டுகளை தாண்டியிருக்கிறது. இங்கு வழிபடக் கூடிய மக்கள் கோயில் பராமரிக்கப்படாமல் உள்ளது என்றும், திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் நடத்த முயற்சிக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அந்த பணிகளை செய்திட முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு :** இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றை கூற விரும்பு கின்றேன். கடந்த காலங்களில் திருப்பணி என்பது, ஒரு 15 ஆண்டுகாலத்தை சீர்தூக்கி பார்த்தால் குறைவான அளவிற்குதான் உபயதாரர்கள் நிதியின் வாயிலாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆட்சியின் நான்கரை ஆண்டு காலத்தில் ரூ.1,520 கோடியினை உபயதாரர்கள் நிதியாக தந்திருக்கிறார்கள். அதற்கு காரணம் உபயதாரர்களின் நேர்த்திக் கடனையும், விரும்புகின்ற பணிகளை ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவதற்கு இந்த அரசிடம் கோரிக்கை வைத்தவுடன் உடனடியாக அதற்கு அனுமதி தருவதோடு மட்டுமல்லாமல், உபயதாரர்களையே அந்த திருப்ப ணிகளை செய்வதற்கு அனுமதி அளித்ததன் விளைவாக ரூ.1,520 கோடி அளவிற்கு உபயதாரர் நிதி வரப் பெற்றிருக்கிறது. உறுப்பினர் கூறிய உபயதாரர் நிதி உடனடியாக திருக் கோயில் வசம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த பணிகளை தொடங்குவதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ். அரவிந்த் ரமேஷ் :** சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி பெருமாள் கோவில் இடம், ஒக்கியம் துரைப்பாக்கம் உத்தண்டி போன்ற ஓஎம்ஆர், ஈசிஆர் ஒட்டிய பகுதிகளில் அறநிலையத்துறைக்கு சொந்தமான இடங்களில்

ஏழை, எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் அதிநவீன திருமண மண்டபங்கள் கட்டித் தந்து ஏழை, எளிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு: :** திருமண மண்டபங்களை பக்தர்களின் நேர்த்திக் கடனுக்காவும், இந்துகளின் திருமணங்கள் நடைபெற வேண்டும் என்பதற்காகவும், அதே நேரத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் பயன்படுத்துகின்ற வகையில் முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 82 திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருந்தார்கள். நல்ல மனம் கொண்டோர் சிலர் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு தீட்டுகின்ற திட்டங்களால் அந்த திருமண மண்டபங்களை கட்டுவதற்கு தடையாணை வழங்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக சட்டப்போராட்டம் நடத்தி, மாண்பமை உச்சநீதிமன்றத்தில் நிலுவையி லுள்ள வழக்கில் வென்று, உறுப்பினர் கோருகின்ற திருமண மண்டபங்களை கட்டித் தருவதற்கான முயற்சிகளை இந்த ஆட்சி எடுக்கும் என்பதனை உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**பால் மனோஜ் பாண்டியன் :** ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியிலுள்ள திருக்கோயில்களை சீரமைப்பதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் இரண்டரை இலட்சத்தை மூன்று இலட்சமாக உயர்த்தி தரப்படும் என கடந்த முறை நான் பேசிய போது அமைச்சர் உத்தரவாதத்தை தந்தார்கள். நான்கேட்கவிரும்புவதெல்லாம் கட்டுமானங்களுக்கான செலவினங்கள் கூடுகின்ற வேளையில் அந்த செலவினங்களை அடிப்படையாக கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கப்படுமா என கேட்டு, அமைச்சர் பாப்பான்குளம் கருத்தீஸ்வரர் திருக்கோயிலையும், பூலாங்குளம் உச்சிமாகாளியம்மன் கோயிலையும் பார்த்து சென்றீர்கள். அந்த திருக்கோயில்களுக்கான நிதியும் இந்தாண்டு உயர்த்தப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்பு கிறேன்.

**அமைச்சர் பி.கே. சேகர் பாபு:** பாப்பான்குளம் அருள்மிகு கருத்தீஸ்வரர் திருக்கோயில் மற்றும் பூலாங்குளம் உச்சிமாகாளியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட திருக்கோயில்களாக இருந்தாலும் உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று ரூ. 2.70 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் கோரிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதி திருக்கோயில்களை பொறுத்தளவில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, திருக்கோ யில்களின் திருப்பணிகளில் ஒரு அமைதிப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். கடந்த ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிடர் பகுதி மக்கள் வாழும் பகுதி திருக்கோ யில்கள் மற்றும் கிராமப்புறத் திருக்கோயி ல்களின் திருப்ப ணிக்கு ஆண்டிற்கு தலா 1000 திருக்கோயில்கள் என எடுத்து கொள்ளப்பட்டு நிதியுதவியாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 10 ஆண்டுகளில் ஒட்டு மொத்தமாக 4 திருக்கோயில்க ளுக்குதான் திருப்பணி நடைபெற்றிருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், 1000 ஆதிதிராவிடர் பகுதி மக்கள் வாழும் பகுதி திருக்கோயில்கள் மற்றும் 1000 கிராமப்புறத் திருக்கோயில்களின் எண்ணிக்கை தலா 1,250 ஆக உயர்த்தியதோடு, திருப்பணி நிதியுதவி ரூ. 2 இலட்சமாக உயர்த்தப்பட்டது, முதல் ஆண்டிலேயே 2,500 திருக்கோயில்களுக்கான நிதியுத வியையும் ஒரே இடத்தில் மாபெரும் விழாவினை நடத்தி வழங்கிய பெருமை நமது முதலமைச்சர் அவர்களை சாரும். அதன் பின்னர் நிதியுதவித் தொகை 2 இலட்சம் ரூபாய் தற்போது இரண்டரை இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 10,000 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்து இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இந்த சரித்திர சாதனை எந்த காலக்கட்டத்திலும் நடைபெற்றதில்லை. இந்த 4 ஆண்டு களில் இப்படிப்பட்ட ஒரு அமைதியான திருப்பணி புரட்சி நடத்திய ஆட்சியை ஆன்மிக ஆட்சி என ஆன்மிகவாதிகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர் என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மத்திய வட்டாரம் / இயந்திர பொறியியல் துறை**

இ. பொ. து. ம. வா. ப. ந. க. எண். சி1/ 287/ 2025

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

**பெருநகர சென்னை மாநகராட்சி - 08 எண்ணிக்கையிலான டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் மகளிர் ஒப்பனை அறைக்கான 270 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பம் (ஒப்ப விதிகளின்படி)**

முன் வைப்பு தொகை **ரூ.95,000/-** ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **03.11.2025** மதியம் **3.00** மணி

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் :- **04.11.2025** மதியம் **3.30.** மணி

மேலும் விபரங்களுக்கு: **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்

செ.ம.தொ.இ / 5690 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (மத்தியம்)**




கோவை தெற்கு மாவட்டம், சூலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம், குமாரபாளையம் ஊராட்சியில் ரூ.17இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து, ரூ.6.66 இலட்சம் மதிப்பீட்டில் உடுமலை சாலை முதல் கொடுவாய் சாலை வரை தார்ச்சாலை அமைக்கும் பணியினை துவக்கி வைத்து, ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நூலகத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. திறந்து வைத்தார். இதில் சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துமாணிக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிக்கந்தர் பாஷா, சிவகாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தில்

# புதிய தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், அக். 17 –

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல், மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி கள் அமைத்தல், பள்ளி வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திக ரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டம், ஆண்டிடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி தீயணைப்பு துறை வாகனத்தின் செயல்பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஆண்டிமடம் தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. இப்பகுதியில் அதிகளவில் தீ விபத்து ஏற்படுகின்ற சூழல் இருந்தது அதை தடுப்பதற்கும், அதற்கான தீர்வு களுக்கு கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தது. அரியலூர் மாவட்டம் அதிகமான குடி சைப்பகுதிகள் உள்ள மாவட்ட மாகும். இதனை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருமானூர் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி அறிவிப்பாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தினை வழங்கியிருக்கிறார்கள். குன்னத்தில் பணிமனை துவங்குகின்ற வாய்ப்பை வழங்கியிருக்கிறார்கள். மேலும் ஜெயங்கொண்டத்தில் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. வரும் மாதத்தில் குன்னத்திலும் திறக்கப்படவுள்ளது. செந்துறையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று அரியலூர் மாவட்டத்தில் பிலாக்குறிச்சி, சிலால், தண்டலை மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் கொளக்காநத்தம் ஆகிய நான்கு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க இன்றைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து ஜெயங்கொண்டம் சிப்காட் தொழிற்பேட்டை புதிய காலணி தொழிற்சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். அது சுற்றுச்சூழல் அனுமதிக்காக உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் பணிகள் துவங்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் தான் விருத்தா சலம் ஜெயங்கொண்டம் சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. 2006 – 2011 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறி ஞர் கலைஞர் முதல மைச்சராக இருந்தபோது நான் சட்டமன்றத்தில் இந்த பாலத்தின் அவசியம் குறித்து பேசினேன். தலைவர் கலைஞர் அவர்கள் மதனத்தூர் நீலத்தநல்லூர் அமைக்க உத்தர விட்டார்கள்.

இந்த பாலம் தஞ்சை மாவட்டத்தையும் அரியலூர் மாவட்டத்தினையும் இணைக்கும் வகையில் இருக்கிறது இன்று அச்சாலைகள் அகலப்படுத்தப்பட்டதால் அப்பகுதி வணிக சாலையாகவே மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8000 ஏக்கர் நிலப்பரப்பு திரும்ப வழங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத சாதனையாகும். இத்திட்டத்திற்காக பெறப்பட்ட நிலத்திற்கு வழங்கபட்ட தொகையினை அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டாம் எனவும் தெரிவித்து, நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு நிலத்தினை திரும்ப வழங்கும் வண்ணம் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியின் வளர்ச்சியினை முன்னேற்றும் வகையில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை தந்து கொண்டு இருக்கிறார். இன்று இரண்டு தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது

இதுதான் மக்களுக்கான திராவிட மாடல் அரசு

என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ.ரா.சிவராமன், துணை இயக்குநர் மத்திய மண்டலம் திருச்சி முரளி, மாவட்ட அலுவலர் பெரம்பலூர் அரியலூர் ஒருங்கிணைந்த மாவட்டம் அனுசுயா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி மாவட்ட அலுவலர் பெரம்பலூர் வீரபாகு, நிலைய அலுவலர் செந்தில்குமார், தீயணைப்பு துறை அலுவலர்கள், ஒன்றிய கழக பொறுப்பா ளர்கள் ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், ஆர். செந்தில்குமார், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள்,மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், வார்டு எண்.30 க்குட்பட்ட கணபதி மாநகராட்சி ஆரம்ப பள்ளி வளாகத்தில், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.18.50 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் மற்றும் கூட்ட அரங்கு கட்டும் பணி மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி மற்றும் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் (இரண்டு மையம்) கட்டும் பணிகளை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் முனைவர் கணபதி ப. ராஜ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர் துரை.செந்தமிழ் செல்வன், கணபதி பகுதி கழகப் பொறுப்பாளர் ராமச்சந்திரன், வட்டக் கழக செயலாளர் செங்குட்டுவன், மாமன்ற உறுப்பினர் சரண்யா உள்பட மாநகராட்சி அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்

### அக்டோபர் 17 (2004)



**இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**